Tsi11Acc

தென்காசி மாவட்டம்

01147

அரையாண்டுப் பொதுத் தேர்வு டிசம்பர் 2023

# வகுப்பு - 11

காலஅளவு: 3.00 மணி நேரம் **கணக்குப்பதிவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

## பகுதி - I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20

2. கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   அ) மேலாண்மை கணக்கியல் ஆ) சமூகக் கணக்கியல்
   இ) பொறுப்பு கணக்கியல் ஈ) காரிய தரிசிகளின் கணக்கியல்
2. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதைக் கூறும் கருத்து
   அ) வணிகத் தனித்தன்மைக் கருத்து ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து
   இ) இரட்டைத் தன்மைக் கருத்து ஈ) அடக்கவிலைக் கருத்து
3. இரட்டைப் பதிவு முறையில் கணக்குகளை பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது
   அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள்
   ஆ) ஒரே கணக்கில் வெவ்வேறு தேதிகளில்
   இ) ஒரே கணக்கில் இரு பக்கங்களில்
   ஈ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள்
4. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்
   அ) குறைவாக கூட்டுதல் பிழைகள் ஆ) விதிப் பிழைகள்
   இ) பகுதி விடு பிழைகள் ஈ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்
5. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தை விட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
   அ) இருப்பு இன்மை ஆ) வரவு இருப்பு
   இ) பற்று மற்றும் வரவு இருப்பு ஈ) பற்று இருப்பு
6. பற்று இருப்புகளும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டு க/குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல்
   அ) இருப்பாய்வு ஆ) குறிப்பேடு
   இ) பேரேடு ஈ) இருப்பு நிலைக் குறிப்பு
7. பேரேட்டு கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது
   அ) குறிப்பேடு ஆ) வியாபாரக் க/கு
   இ) இலாப நட்டக் க/கு ஈ) இருப்பாய்வு
8. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
   அ) ஒரு நடப்புச் சொத்து ஆ) ஒரு நீர்மைச் சொத்து
   இ) புலனாகும் சொத்து ஈ) புலனாகாச் சொத்து
9. விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?
   அ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை
   ஆ) அனைத்து சரக்குகளின் விற்பனை
   இ) அனைத்து சொத்துகள் மற்றும் சரக்கு விற்பனை
   ஈ) அனைத்து சொத்துகளின் கடன் விற்பனை
10. ரொக்க ஏடு ஒரு
    அ) உரிய குறிப்பேடு
    ஆ) துணை ஏடு
    இ) துணை ஏடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்
    ஈ) முதன்மை ஏடு
11. வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
    அ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தி
    ஆ) வங்கி அறிக்கை
    இ) சில்லறை ரொக்க ஏடு
    ஈ) ரொக்க ஏடு

www.Padasalai.Net

Scanned with ACE Scanner

Tsi11Acc

12. கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது
அ) அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சொத்துக்கள்
ஆ) உடனடியாக பணம் பெற்றுக்கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது
இ) சரக்களித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு
ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

13. பின்வரும் எந்த சொத்துகளுக்கு போக்கெழுதுகள் முறை பயன்படுகிறது
அ) மரக்கட்டைகள் ஆ) நிலக்கரி
இ) கனிமச் சுரங்கங்கள் ஈ) காப்புரிமை

14. நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நீண்ட கால கடன் தொகை
அ) வருவாயின வரவுகள் ஆ) முதலினச் செலவுகள்
இ) முதலின வரவுகள் ஈ) வருவாயினச் செலவுகள்

15. பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துகளில் சேராதது?
அ) அறைகலன் ஆ) ரொக்கம்
இ) முன்கூட்டிச் செலுத்திய செலவு ஈ) சரக்கிருப்பு

16. இருப்புநிலைக் குறிப்பு வணிகத்தின் ________ காண்பிக்கிறது.
அ) விற்பனையை ஆ) கொள்முதலை
இ) இலாபத்தினை ஈ) நிதி நிலையை

17. உள்தூக்குக் கூழி எதில் காண்பிக்கப்படும்?
அ) கடன் பக்கத்தில் ஆ) வியாபாரக் கணக்கில்
இ) சொத்து பக்கத்தில் ஈ) இலாப நட்டக் கணக்கில்

18. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது
அ) அடக்க விலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலையில்
ஆ) அடக்க விலையில்
இ) அடக்க விலை அல்லது நிகரத் தேர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்
ஈ) சந்தை விலையில்

19. நிகர இலாபம்
அ) எடுப்புகள் கணக்கில் பற்று வைக்கப்படும்
ஆ) முதல் கணக்கில் பற்று வைக்கப்படும்
இ) எடுப்புகள் கணக்கில் வரவு வைக்கப்படும்
ஈ) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்

20. கணிணியமக் கணக்கியல் முறையிலன் குறைபாடுகளில் ஒன்றானது
அ) பலதுறைப் புலமை ஆ) கணினி அமைப்பு செயலிழத்தல்
இ) தேக்ககம் ஈ) துல்லியத் தன்மை

www.Padasalai.Net

## பகுதி - II

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: 7×2=14

21. கணக்கியலை வரையறு.
22. தேய்மானம் என்றால் என்ன?
23. விதிப்பிழை என்றால் என்ன?
24. சில்லறை ரொக்க ஏடு என்றால் என்ன?
25. ஆயத்த மென்பொருளுக்கு உதாரணங்களில் ஏதேனும் 2 தரவும்.
26. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கை தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 2018 | | | |
| ஜனவரி | 1 | கையில் உள்ள அறைகலன் | ₹ 1,000 |
| | 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 2,000 |
| | 20 | அறைகலன் விற்றது | 200 |

27. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து நேர்கோட்டு முறையில் ஆண்டுத் தேய்மானத் தொகையை கணக்கிடுக.

| | |
|---|---|
| சொத்தின் அடக்க விலை | ₹ 10,000 |
| எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் | 10 வருடங்கள் |
| எதிர்நோக்கும் இறுதி மதிப்பு | ₹ 2000 |

Scanned with ACE Scanner

28. பின்வரும் விவரங்களிலிருந்து பிரகதீஷ் என்பவரின் 2017 டிசம்பர் 10ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| கடனாளிகள் | 12,800 | நிகர இலாபம் | 4,800 |
| எடுப்புகள் | 8,800 | இயந்திரம் | 43,200 |

29. திரு.கோபி என்பவரின் (தன் வணிகம்) 2017-18 ஆம் ஆண்டிற்கான வருமான வரி ₹ 40,000 தொழிலில் இருந்து செலுத்தப்பட்டது. சரிக்கட்டுப் பதிவு தருக.

30. பின்வரும் குறிப்பேட்டு பதிவுகளுக்கான விளக்கக் குறிப்பு தருக.

| நாள் | விவரம் | பே.எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| (i) | ரொக்க க/கு | | 2,00,000 | |
| | சந்திரன் முதல் க/கு | | | 2,00,000 |
| (ii) | மகேஷ் க/கு | | 40,000 | |
| | விற்பனை க/கு | | | 40,000 |

## பகுதி - III

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21
வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31. கணக்கியலின் முக்கியத்துவத்தை விரிவாக விளக்குக. (ஏதேனும் 3)

32. 2018 ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.

| | |
|---|---|
| சொத்துகள் : ரொக்கம் | ₹ 40,000 |
| சரக்கிருப்பு | ₹ 50,000 |
| ராஜியிடமிருந்து பெறவேண்டியது | ₹ 50,000 |
| இயந்திரம் | ₹ 40,000 |
| பொறுப்புகள் ஹரி என்பவருக்கு செலுத்த வேண்டியது | ₹ 30,000 |

தொடக்கப் பதிவினைத் தருக.

33. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக,
(i) வெளித்தூக்குக்கூலி (ii) வாடகை பெற்றது
(iii) முதல் (iv) கூலி
(v) விற்பனை (vi) விற்பனைத் திருப்பம்

34. பின்வரும் நடவடிக்கைகளை மோகன் & கோ நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிக.

2017
ஆகஸ்ட் 1 இடாப்பு எண் 68 ன் படி செந்திலுக்கு கடனுக்கு விற்றது ₹ 23,000
ஆகஸ்ட் 4 இடாப்பு எண் 74 ன் படி மணி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 10,500
ஆகஸ்ட் 8 சுரேஷ் என்பவருக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹ 6,500
ஆகஸ்ட் 25 கமலா என்பவருக்கு கடனுக்கு விற்றது
10 மேசைகள் ஒன்று ₹ 1,500 வீதம்
20 நாற்காலிகள் ஒன்று ₹ 200 வீதம்

35. முப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

36. நிலைச்சொத்து ₹ 50,000-க்கு வாங்கப்பட்டது, தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15% குறைந்து செல் இருப்பு முறையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.

37. சரிகட்டுப்பதிவுகள் என்றால் என்ன?

38. கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.

39. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.

40. இலாப நட்டக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 50,000 | வட்டி பெற்றது | 2,000 |
| அலுவலக வாடகை | 10,000 | வெளித்தூக்குக்கூலி | 2,500 |
| தள்ளுபடி கொடுத்தது | 12,000 | பொதுச் செலவுகள் | 3,000 |
| விளம்பரம் | 4,000 | | |
| தணிக்கை கட்டணம் | 1,000 | | |

www.Padasalai.Net

Scanned with ACE Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35

41. அ) கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்கு தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தருக.
   i) இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹ 5,000
   ii) கொடுபட வேண்டிய சம்பளம் ₹ 150
   iii) காப்பீடு முன்கூட்டிச் செலுத்தியது ₹ 450
   iv) முன்கூட்டிப் பெற்ற கழிவு ₹ 20,000
   v) முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ₹ 1,000

**(அல்லது)**

ஆ) எட்வர்ட் என்பவரின் ஏடுகள் கீழ்க்கண்ட இருப்புகளைக் காட்டுகிறது 2016 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

| பற்று இருப்பு | ₹ | வரவு இருப்பு | ₹ |
|---|---|---|---|
| எடுப்புகள் | 5,000 | முதல் | 1,31,500 |
| பற்பல கடனாளிகள் | 60,000 | கடன் (வட்டி 6% ஆண்டுக்கு) | 20,000 |
| நிலக்கரி எரிவாயு & நீர் | 10,500 | விற்பனை | 3,56,500 |
| உள் திருப்பம் | 2,500 | முதலீடுகள் மீது வட்டி | 2,550 |
| கொள்முதல் | 2,56,000 | பற்பல கடனீந்தோர் | 4,000 |
| சரக்கிருப்பு (1.1.2016) | 89,700 | | |
| பயணச் செலவுகள் | 51,250 | | |
| கடன்மீது வட்டி செலுத்தியது | 300 | | |
| சில்லறை ரொக்கம் | 710 | | |
| பழுதுபார்ப்பு செலவு | 4,090 | | |
| முதலீடுகள் | 70,000 | | |
| | 5,50,550 | | 5,50,550 |

சரிகட்டுதல்கள் :
i) 31.12.2016 அன்று இறுதி சரக்கிருப்பு மதிப்பு ₹ 1,30,000
ii) 9 மாதங்களுக்குரிய கடன் மீது வட்டி கொடுபட வேண்டியுள்ளது

42. அ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

**(அல்லது)**

ஆ) கீழ்க்காணும் நடவடிக்கைகளை ஆசித் என்பவரின் ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| 2017 | | |
|---|---|---|
| அக். 1 | ரொக்க இருப்பு | ₹ 37,500 |
| 3 | ரொக்க விற்பனை | ₹ 33,000 |
| 7 | வேலனுக்கு செலுத்திய ரொக்கம் ₹ 15,850 அவர் அனுமதித்த தள்ளுபடி | ₹ 150 |
| 13 | பெருமாள் என்பவருக்கு கடனுக்கு விற்ற சரக்கு | ₹ 19,200 |
| 15 | சொந்த செலவுக்காக பணம் எடுத்தது | ₹ 4,800 |
| 16 | மணியிடமிருந்து சரக்குகள் கடனுக்கு வாங்கியது | ₹ 14,300 |
| 22 | ரொக்கம் வங்கியில் செலுத்தியது | ₹ 22,700 |
| 25 | பெருமாளிடம் ரொக்கம் பெற்று அவர் கணக்கைத் தீர்த்து கொண்டது | ₹ 19,000 |
| 26 | அலுவலக செலவிற்காக காசோலை மூலம் ரொக்கம் எடுத்தது | ₹ 17,500 |
| 27 | கோபால கிருஷ்ணனுக்கு ரொக்கம் செலுத்தியது | ₹ 2,950 |
| | அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி | ₹ 50 |

43. அ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்பனைத் தொகையை காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 20,000 |
| நிகர கொள்முதல் | 70,000 |
| நேரடிச் செலவுகள் | 10,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 30,000 |
| மொத்த இலாப விகிதம் (விற்பனையில்) | 20% |

**(அல்லது)**

Scanned with ACE Scanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு மோகன் என்பவரின் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டை முன்பண மீட்பு முறையில் தயாரிக்கவும்.

| 2017 | | ₹ |
|---|---|---|
| ஏப்ரல் 1 | கையிருப்பு ரொக்கம் | 250 |
| 1 | ரொக்கம் பெற்றது | 1,050 |
| 7 | மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | 100 |
| 12 | துரித அஞ்சல் செலவு செய்தது | 125 |
| 16 | சிற்றுண்டி செலவுகள் செய்தது | 250 |
| 30 | அமுதாவிற்கு ரொக்கம் செலுத்தியது | 350 |

44. அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு நாளந்தா புத்தகக் கடையின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்யவும்.

2017

டிச. 1 உமாதேவி டிரேடர்சிலிருந்து கடனுக்கு வாங்கியது
ஒன்று ₹ 80 வீதம் 100 வணிகப் புள்ளியியல் புத்தகங்கள்
ஒன்று ₹ 150 வீதம் 100 கணக்குப்பதிவியல் புத்தகங்கள்

டிச. 7 ஸ்ரீதேவி & கோ விற்கு கடனுக்கு விற்றது
ஒன்று ₹ 90 வீதம் 240 வணிகப்புள்ளியியல் புத்தகங்கள்
ஒன்று ₹ 170 வீதம் 250 கணக்குப்பதிவியல் புத்தகங்கள்

டிச. 10 சுபா & கோ விடமிருந்து வாங்கியது
ஒன்று ₹ 80 வீதம் 40 பொருளாதாரப் புத்தகங்கள்
கழிக்க : வியாபாரத் தள்ளுபடி 15%

டிச.15 புத்தகங்கள் திருப்பப்பட்டது பணம் பெறப்படாதது - 10 கணக்குப்பதிவியல்

டிச. 18 குப்தா பிரதர்ஸிற்கு கடனுக்கு விற்றது
ஒன்று ₹ 95 வீதம் 200 பொருளாதாரப் புத்தகங்கள்

டிச. 25 சுபா & கோ விற்கு பொருளாதாரப் புத்தகங்கள் திருப்பி அனுப்பப்பட்டன

**(அல்லது)**

ஆ) இரட்டைப்பதிவு முறை வரைவிலக்கணம் தந்து அதன் நன்மைகளை விவரி.

45. அ) நடேசனின் இருப்புகளிலிருந்து 2018 டிசம்பர் 31ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | பற்று ( ₹ ) | வரவு ( ₹ ) |
|---|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 8,00,000 | |
| நிலம் மற்றும் கட்டிடம் | 6,00,000 | |
| அறைகலன் | 1,50,000 | |
| கைரொக்கம் | 20,000 | |
| வங்கி மேல் வரைப்பற்று | | 1,80,000 |
| கடனாளிகள் மற்றும் கடனீந்தோர் | 4,20,000 | 3,00,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 4,00,000 | |
| குறுகிய கால முதலீடுகள் | 80,000 | |
| முதல் | | 15,00,000 |
| எடுப்புகள் | 1,30,000 | |
| நிகர இலாபம் | | 6,20,000 |
| | 26,00,000 | 26,00,000 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து இம்மானுவேல் அறைகலன் நிறுவனத்தின் 2017 ஜூன் மாதத்திற்கான கொள்முதல் ஏடு மற்றும் கொள்முதல் திருப்ப ஏடு தயார் செய்க.

Scanned with ACE Scanner

| | |
|---|---|
| 2017 | |
| ஜூன் 1 | பாலு நிறுவனத்திடம் ஒன்று ₹ 150 வீதம் 20 நாற்காலிகள் கடனுக்கு வாங்கியது |
| ஜூன் 13 | சுபாஷிடமிருந்து கடனுக்கு வாங்கியது<br>ஒன்று ₹ 3,100 வீதம் 3 அலமாரிகள்<br>ஒன்று ₹ 1,500 வீதம் 10 மேசைகள்<br>ஒன்று ₹ 200 வீதம் 15 நாற்காலிகள<br>கழிக்க : 10% வியாபாரத் தள்ளுபடி (அனைத்து பொருட்களுக்கும்)<br>கூட்டுக : ₹ 220 சரக்கு தூக்குககூலி |
| ஜூன் 21 | பழுதானதால் 2 நாற்காலிகள் திருப்பி அனுப்பப்பட்டன. ரொக்கம் பெறப்படவில்லை. |
| ஜூன் 24 | சன்ரைஸ் அறைகலன் நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கியது<br>ஒன்று ₹ 1,300 வீதம் 25 அலமாரிகள் |
| ஜூன் 27 | மௌலி டிரேடர்சிடமிருந்து கடனுக்கு வாங்கியது<br>ஒன்று ₹ 3,275 வீதம் 10 நிர்வாக மேசைகள் |
| ஜூன் 29 | பழுதடைந்த மூன்று அலமாரிகள் சன்ரைஸ் அறைகலன் நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டன. ரொக்கம் பெறப்படவில்லை. |

46. அ) பின்வரும் விவரங்களிலிருந்து அகல்யாவின் 2016 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபாரக் கணக்கைத் தயாரிக்கவும்.

| பற்று இருப்பு | ₹ | வரவு இருப்பு | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 80,000 | கொள்முதல் திருப்பம் | 10,000 |
| கொள்முதல் | 8,60,000 | விற்பனை திருப்பம் | 3,16,000 |
| உள் ஏற்றிச்செல் செலவு | 52,000 | கொள்முதல் மீதான இறக்குமதி வரி | 30,000 |
| கூலி | 24,000 | விற்பனை | 1,44,000 |

சரிகட்டுதல்கள்:

i) இறுதிச் சரக்கிருப்பு ₹ 1,00,000

ii) கொடுபட வேண்டிய கூலி ₹ 12,000

iii) உள் ஏற்றிச் செல் செலவு முன்கூட்டிச் செலுத்தியது ₹ 5,000

**(அல்லது)**

ஆ) கீழ்க்காணும் செலவினங்களையும் வரவு இனங்களையும் முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.

i) நிலைச்சொத்து வாங்குவதற்காக இயக்குநரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை ₹ 10,000.

ii) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை ₹ 1,25,000.

iii) புதிய கட்டடம் கட்டுவதற்காக பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மேற்கொண்ட செலவு ₹ 30,000.

iv) தீயினால் இயந்திரத்திற்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக பெறப்பட்ட காப்பீட்டுரிமைத் தொகை ₹ 75,000.

v) வங்கியிடமிருந்து பெற்ற கடன் ₹ 2,50,000.

47. அ) இராமு நிறுவனம் ஜூலை 1, 2016ல் இயந்திரம் ஒன்றை ₹ 14,000-க்கு வாங்கியது. அதை நிறுவுவதற்கு ₹ 1,000 செலவழித்தது. நிறுவனம் நிலைத் தவணை முறையில் 10% ஆண்டுதோறும் தேய்மானமாக நீக்கியது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31ல் முடிக்கப்படுகின்றன. முதல் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டு பதிவுகள் தந்து இயந்திரக் க/கு தயாரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை தருக.

----------

Scanned with ACE Scanner